தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



மரம் 9
கனி 1
டிசம்பர் 2008

ஆசிரியர்
B. அர்ஜுனன்



## ஆதாம் - Adam

- முதல் மனிதன் - ஆதி.2:7
- அவன் மனைவி ஏவாள் - ஆதி 2:23
- தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவன் - ஆதி. 1:27
- அவனுடைய பிள்ளைகள் காயீன், ஆபேல், சேத் மற்றும் குமார குமாரத்திகள் - ஆதி.5:3
- உயிரோடிருந்த நாட்கள் 930 வருஷம் - ஆதி.5:5
- ஆதாம் மூலமாகவே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது - ரோம.5:12
- ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை - 1தீமோ.2:14
- ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள் - ரோம.5:19
- முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது, பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார் - 1கொரி.15:45
- ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் - 1கொ.15:22





## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்-2009


வருட காலண்டர் தேவைப்படுவோர்
உங்களுடைய பதிவு எண்ணுடன்
**Rs.10/- M.O** செய்யுங்கள்.
உங்கள் வீடு தேடி வரும்.
குறிப்பு: சந்தாதாரர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும்




## கிறிஸ்துவின் வசனம்
### *வழங்கும்*
### *தொலைக்காட்சி நிகழ்ச்சி*



தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15
இமயம் *TV* யில் செவ்வாய் காலை 6.30 - 6.45
இமயம் *TV* யில் வியாழன் காலை 6.15 - 6.30



### *ரேடியோ நிகழ்ச்சி*

இலங்கை ஆசிய சேவை *SW25* மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை.



***கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்***

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16


**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 டிசம்பர் - 2008 கனி - 1


ஆசிரியருரை

## மாதிரியை நோக்குங்கள்

### Note The Example



"நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி, நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" என்று பவுல் பிலிப்பிய சபையாருக்கு சொல்வதை பிலி.3:17-ல் வாசிக்கிறோம். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்தவைகளை சொல்லுவார்கள். அதனுடைய முடிவு அவர்களுக்கே தெரியாது. ஆனால் ஆவிக்குரிய ஒரு கிறிஸ்தவன் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவி கொடுத்து, வேதாகமம் சொல்லுகிறவர்களை மாதிரிகளாக நோக்க வேண்டும்.

**விசுவாசவிஷயத்தில் நாம் ஆபிரகாமை நோக்கிப்பார்க்கும்போது;** "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது" என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.4:20-23). இன்று இருக்கிற நாமும் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கிப்பாத்து, விசுவாச விஷயத்தில் வாக்குத்தத்தம் செய்த கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்போது, விசுவாசமுள்ள பிள்ளைகளாக மாறுவோம். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும்

விசுவாசிக்கவேண்டும்" (எபி.11:6). கர்த்தர் தம்மைத்தேடுகிறவர்களை ஒருநாளும் கைவிடார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஆபிரகாம் அதை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அன்பான வாசகரே, இன்று தேவனை விசுவாசிப்பீர்கள் என்றால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். அவர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர். ஆபிரகாமைப்போல நீங்கள் ஆசீர்வதிக்கப்பட விசுவாசவிஷயத்தில் ஆபிரகாமை நோக்கிப்பாருங்கள்.

**உண்மையின் விஷயத்தில் நாம் மோசேயை நோக்கிப்பார்க்கும்போது;** "மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல" என்று எபிரெயர்3:2-ல் படிக்கிறோம். அப்படியானால் மோசே தேவனுடைய வீட்டில் அதாவது தேவனுடைய சபையில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தார் என காண்கிறோம். ஆறு லட்சம் ஜனங்களுக்கு மேலானவர்களை வனாந்தரத்தில் வழி நடத்திக்கொண்டு வந்த மோசே, அவர்களை ஏமாற்றி ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய் அவர்களிடதில் வசூலித்திருந்தாலும் நாற்பது வருடத்தில் 240 லட்சம் ரூபாய் அவர்களிடம் வசூலித்து அவர் ஒரு பெரிய பணக்காரனாக இருந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச்செய்யவில்லை. இஸ்ரவேலை வழிநடத்தும்படியாக தம்மை தெரிந்து கொண்ட இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு உண்மையுள்ள ஊழியக்காரனாக இருந்துகொண்டு செயல்பட்டார். அன்பானவர்களே நாமும் ஏன் அப்படிப்பட்ட சிந்தையுள்ளவர்களாக இருக்கக்கூடாது. இந்த மோசேயைப்போல தேவனுடைய காரியங்களிலும் சரி நம்மை நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிற வேலையிலும் சரி நாம் உண்மையாக இருக்கும்போது தேவனால் உயர்த்தப்படுவோம். "தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என்கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்" என்ற சங்கீதம்101:6-ன்படி உண்மையாய் இருந்தால் அவரோடு வாசம்பண்ணுவோம். இந்தவிதமான நம்பிக்கை உங்களில் இருக்குமானால், மோசேயைப்போல எங்கும் எதிலும் உண்மையாய் இருக்கப்பிரயாசம் எடுங்கள்.

**துதியின் விஷயத்தில் நாம் தாவீதை நோக்கிப்பார்க்கும்போது;** "உமது நீதிநியாயங்களினிமித்தம், ஒருநாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்" என்கிறார் (சங்.119:164). தாவீது இளைஞனாயிருந்த காலந்தொடங்கி கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதித்திருக்கிறார். அவருடைய துதியின் பாடலை அதிகமாக சங்கீதத்தில் காண்கிறோம். தாவீதுடைய வெற்றிக்கு அவருடைய துதியும் ஒரு காரணம் என்றால் அது மிகையாகாது. கர்த்தர் அவருடைய வாழ்க்கையில் செய்த நீதிநியாயங்களினிமித்தம் ஒருநாளில் ஏழுதரம் கர்த்தரை துதித்துப்பாடியிருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவோ காரியங்களை கர்த்தர் செய்கிறார். தேவைப்படும் நேரத்தில் கர்த்தரை தேடுகிறோம். நம்முடைய

காரியங்கள் ஜெயபலமாக முடிந்தவுடன் கர்த்தரை அநேக வேளைகளில் மறந்துவிடுகிறோம். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நாம் எண்ணிப்பார்ப்போமானால் நாமும் கர்த்தரை ஒருநாளில் ஏழுதரம் துதிப்போம். "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" என்கிறார் யாக்கோபு (யாக்.5:13). இங்கு இரண்டு விதமான ஆயுதத்தை நமக்கு நினைவூட்டுகிறார் யாக்கோபு. துன்பப்பட்டவுடன் நண்பர்களை நாடுகிறோம். நம்முடைய துன்பத்தை சொல்லி இருதயபாரத்தை குறைக்க முற்படுகிறோம். ஆனால் குறைகிறதா அதிகரிக்கத்தான் செய்கிறது. என்ன காரணம்? சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லத்தவறிவிடுவதே. யாக்கோபு சொல்வதைப்போல துன்பத்தில் ஜெபிக்கவும், மகிழ்ச்சியான வேளைகளில் கர்த்தரை துதிக்கவும் ஆரம்பியுங்கள். மகத்தான வெற்றியை உங்கள் வாழ்க்கையில் காண்பீர்கள். இந்த இரண்டையும் தாவீது தன்னுடைய வாழ்க்கையில் கடைபிடித்தார். நீங்களும் இந்த தாவீதைப்போல ஒருநாளில் ஏழுமுறை கர்த்தரை துதிக்கமுற்படுங்கள். அப்பொழுது எல்லையில்லா சந்தோஷத்தைப் பெறுவீர்கள்.

**ஞானத்தின் விஷயத்தில் நாம் சாலொமோனை நோக்கிப்பார்க்கும்போது;** "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்கிறான் (நீதி.1:7). சாலொமோனுடைய ராஜ்யபாரம் நிலைத்திருந்ததற்கு ஒரு காரணம் அவன் தாவீதின் தேவனை தேட ஆரம்பித்தான். ஆனபடியினால் சாலொமோனின் ராஜ்யபாரத்தை கர்த்தர் ஸ்திரப்படுத்தினார். அவன் கேட்ட ஞானத்தையும், அவன் கேட்காத செல்வத்தையும் அவனுக்கு வாரிவழங்கினார். அவனுடைய காலத்தில் எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டது. அவனுக்கு ஒத்த ஞானவான் அவனுக்கு முன்பும் அவனுக்குப் பின்பும் எழும்பினதில்லை. அவன் சொல்கிறான் கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். நீங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறீர்களா? அப்படி பயப்படும்போது ஞானத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். ஒரு காரியத்தை செம்மையாய் செய்வதற்கு ஞானமே பிரதானம். "இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிகபலத்தைப் பிரயோகம்பண்ணவேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்" (பிர.10:10). ஆகையால் சாலொமோனைப்போல ஞானத்தின் விஷயத்தில் தம்மை நோக்கி வேண்டிக்கொள்கிற யாவருக்கும் சம்பூர்ணமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் பிதாவாகிய தேவனை நோக்கி ஆண்டவர் இயேசுவின் மூலம் வேண்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது விசேஷித்த ஞானத்தை உங்களுக்குக் கட்டளையிடுவார்.

**ஜெபத்தின் விஷயத்தில் நாம் தானியேலை நோக்கிப்பார்க்கும்போது;** "தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து


வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" (தானி.6:10). மாபெரும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தபோதும், அதைக்குறித்து பயப்படாமல் தான் முன்செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் ஜெபித்தான். இதை பார்த்த எதிராளிகள் ராஜாவுக்கு தெரியப்படுத்தினர். ராஜாவின் அனுமதியின் பேரில் தானியேலை சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். தான் இடைவிடாது ஆராதிக்கிற கர்த்தர் தானியேலை சிங்கங்களின் வாய்களுக்கு தப்புவித்தார். ஜெபம் பண்ண நேரம் இல்லை என்று லேசாக சொல்லிவிடுகிறோம். தானியேலுக்கு நேரம் இருந்ததா? இக்கட்டான சூழ்நிலையில் தன் தேவனை நோக்கி ஜெபிக்க அவன் தயங்கவில்லை. அன்பான சகோதரனே, சகோதரியே உன் தேவனை நோக்கி ஜெபிக்க மறக்காதே. அவர் உன் வேண்டுதலை கேட்பார். நம்பிக்கையோடிரு. "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" என்ற பவுல் ஆலோசனைப்படி (1தெச.5:17) இடைவிடாமல் ஜெபியுங்கள். ஜெபத்தின் விஷயத்தில் தானியேலை நோக்கிப்பாருங்கள். கர்த்தர் உங்களையும் விடுவிப்பார்.

**வேத விஷயத்தில் நாம் எஸ்றாவை நோக்கிப்பார்க்கும்போது;** "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" (எஸ்.7:10). இருதயம் பக்குவப்பட்டாலே எல்லாம் சரியாகும். ஆகையால் தான் முழுஇருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுமனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை என்று ஆண்டவர் சொல்லுகிறார். வேதமே தன் உயிர் மூச்சாக கொண்டவன் இந்த எஸ்றா. அவன் கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். இன்றைக்கு தேர்ச்சியடைகிறார்கள், கல்வியில், அழகில், சண்டையில், பணத்தில். ஆனால் தேர்ச்சியடைய வேண்டியதில் தேர்ச்சியடையாமற்போகிறார்கள். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். இதை அறிந்த படியினாலே எஸ்றா பிரமாணத்தில் தேறின வேத பாரகனாயிருந்தான். உங்களுடைய வாழ்க்கையில் வேதாகமத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? அப்படியானால் அதை பைண்டிங்செய்து தூய்மையாக வைத்திருப்பதல்ல. அதில் உள்ள தேவனுடைய வார்த்தைகளை அநுதினமும் தியானித்து. அவைகளை தன்னுடைய வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டும். எஸ்றா வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், அதை ஜனங்களுக்கு உபதேசிக்கவும் தவறவில்லை. முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய்

வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்தார்கள் என்று அப்.17:11-ல் வாசிக்கிறோம். நீங்களும் அந்தப்படியாக வாசித்து, எஸ்றாவைப்போல வேத விஷயத்தில் இருதயத்தை பக்குவப்படுத்திக்கொள்ளுங்கள்.

**மொத்தத்தில் நாம் நோக்கிப்பார்க்கவேண்டிய ஒருவர் இருக்கிறார். அவர் தான் ஆண்டவர் இயேசுகிறிஸ்து.** உலகத்தில் உள்ள எல்லோருக்கும் மாதிரியாக கொடுக்கப்பட்டவர் இயேசு ஒருவரே. அவரை நோக்கிப்பார்த்து நாம் பிரகாசம் அடைவோம். "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:21). பழைய ஏற்பாட்டு புஸ்தகத்தில் சொல்லப்பட்ட ஆறு மாதிரிகளை நோக்கிப்பார்த்தோம். இவர்கள் எல்லோருமே நமக்கு உபாத்திகள்தான். ஆனால் ஆண்டவர் இயேசு எல்லோருக்கும் மேலானவர். நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்துபோம் என்ற வார்த்தைப்படி நிறைவானவராகிய இயேசு நமக்கு கொடுக்கப்பட்டுள்ளார். ஆகையால்தான் இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று வானத்திலிருந்து பிதாவாகிய தேவனாலே கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆண்டவர் நம்மைப்போல மாமிசத்திலே வெளிப்பட்டார், அநேக பாடுகளை அநுபவித்தார், பாவிகளை இரட்சிக்கும்படியாக தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் நோக்கிப்பார்க்கவேண்டியவர் இயேசு ஒருவரே. அவர் சொல்லுகிறார் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). நான் அந்த நபரை பார்த்து மோசம்போனேன், இந்த நபரை பார்த்து மோசம்போனேன் என்று அநேகர் சொல்லக்கேள்விப்பட்டிருப்பீர்கள். நாம் இந்த உலகத்தில் பழைய ஏற்பாட்டு புத்தகத்திலே சொல்லப்பட்ட ஆறு முற்பிதாக்களையும், புதிய ஏற்பாட்டில் இறுதியாக சொல்லப்பட்ட இயேசுவையும் நாம் நோக்கிப் பார்ப்போமானால் நாம் ஏமாற்றப்படவேண்டிய அவசியம் இல்லை. இன்றே இயேசுவை நோக்கிப்பாருங்கள். மத கண்ணோட்டத்தோடு அல்ல. ஜீவனுள்ள மார்க்கம், உலகத்தை உண்டாக்கிய தேவனுடைய வழி இதுவே என்ற கண்ணோட்டத்தோடு பாருங்கள்.

*ஒவ்வொரு நாளும் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம்*
*ஏதோ கொஞ்சம் உனக்குச் சொல்லட்டும்*
*ஒவ்வொரு நாளும் நீ ஜெபத்தின் மூலம்*
*ஏதோ கொஞ்சம் தேவனிடத்தில் சொல்லு*
*ஒவ்வொரு நாளும் நீ தேவனைப் பற்றி*
*ஏதோ கொஞ்சம் யாரிடமாவது சொல்லு*
*ஒவ்வொரு நாளும் நீ யாருக்காவது*
*ஏதோ கொஞ்சம் தேவனுக்காக செய்.*



# புதிய சமய பழக்கங்கள்

## New Religious Practices

*-J.C.Choate*

மத உலகம் அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன்பாகக் கூட நினைத்துப்பார்த்திராத பழக்கங்கள் இன்று அதிகமாகக் காணப்படுகிறது. புதிய சபைகள், புதியநாமங்கள், புதிய ஆராதனை முறைமைகள், புதிய தலைவர்கள், புதிய போதனைகள் மேலும் புதிய தத்துவங்கள் நிறைந்து காணப்படுகிறது.

உதாரணமாக பெந்தெகொஸ்தே ஜனங்கள் மத்தியில் சமீப காலங்களில் இந்தப் பழக்கம் வளர்ச்சியடைந்துள்ளது: 'சுகத்தினை' விரும்புகின்ற அல்லது பரிசுத்தஆவியின் விசேஷத்த 'அபிஷேகத்தினை' விரும்புகின்ற ஜனங்கள் மேடையில் வரிசை வரிசையாகக் காணப்படுகின்றனர். புகழ்பெற்ற பிரசங்கியார் அவர்களுக்கு முன்பாக நின்று அவர்களைத் தொடும்படி கடந்து வருகிறவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் ஏதோ கண்ணுக்குப் புலப்படாத சக்தியினால் தாக்கப்பட்டவர்களைப்போல ஒவ்வொருவராய் பின்னோக்கி விழுந்து,, செயலற்று நினைவிழந்தவர்களாய் மாறுகின்றனர். அவ்வாறு அவர்கள் விழுகையில் சிலர் ஒவ்வொருவரையும் பின்னால் நின்று பிடித்து அவர்களைத் தரையில் படுக்கவைக்கின்றனர். சமீபத்தில், நான் டி.வி.யில் இப்படிப்பட்ட காட்சியில் இப்பேர்பட்ட ஒரு பிரசங்கியாரை பார்த்தேன். அவர் வெறுமனே ஜனங்களின் வரிசை பக்கமாக தன்னுடைய கையை அசைத்தார் உடனே ஜனங்கள் பின்னோக்கி விழ ஆரம்பித்தார்கள். மற்றவர்கள் அவர்களை தாங்கிப்பிடிக்க முயற்சித்து பின்பு அவர்கள் கீழே கிடத்தப்பட்டார்கள். அவர் சிரித்து, பரியாசம் செய்யத்தொடங்கி 'நான் உனக்கு கட்டளையிடுகிறேன்! வெளியேறு, அவனை விட்டு புறப்படு எனக் கூறுகின்றார்! அந்த மனிதன் முயற்சிக்கும் போது யாரால் அதிகாரம் செலுத்தப்பட்ட, கண்ணுக்குப் புலப்படாத அந்த சக்தியினால் அவன் மீண்டும் கீழே தள்ளப்படுகிறான், பரிசுத்தஆவியானவர் இவ்வாறு அலட்சியம் பண்ணப்படுவதையும், புதிய ஏற்பாட்டில் அவருடைய வருணணை மற்றும் அவருடைய செயலையும் கவனித்து பார்க்கையில் நான் சோர்ந்து போனேன். இப்படிப்பட்டதான பொய்யான காட்சிகளை நீங்கள் எங்கும் வாசிக்க முடியாது. வேதாகமம் முழுவதிலும் தேவனுடைய பலத்திலும், பிரசன்னத்திலும் ஜனங்கள் இருக்கும்போது அவர்களுடைய தெளிந்த புத்தியைப் பற்றி வாசிக்கும் போதெல்லாம், அவர்களுடைய மாறுத்தரம் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் கூட இருந்ததையே வாசிக்கிறோம். ஆவியினால் யாரும் 'கீழே தள்ளப்பட்டிருந்ததாக' அல்லது தேவனுடைய வல்லமையைக்குறித்து பரிகாசம் பண்ணப்பட்டதாகவும் சிரித்ததாகவும் நாம் ஒருபோதும் வாசிக்கிறதில்லை.

பெந்தெகொஸ்தெ மக்கள் தாங்கள் பரலோகபாஷை பேசுவதாக சமீபகாலமாக அடிக்கடி விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். மீண்டும், வேதாகமத்தில் இவ்வாறாக எங்கு வாசிக்கிறீர்கள்? 'பாஷைகளில்'பேசுவது இம்மக்களால் முழுவதும் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்கள் மட்டும், தங்கள் கைகளை யார் மீது வைத்தார்களோ, அவர்கள் தாங்கள் கற்றறிந்திருந்திராத நவமான பாஷைகள் அல்லது அந்நிய மொழிகளில் பேசுவதற்கு பெலனுடையவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் அப்படிப்பேசின போது, ஒவ்வொருவரும் அவர்கள் என்ன பேசினார்கள் என புரிந்து கொண்டார்கள். தயவுசெய்து, அப்போஸ்தலர்கள் பல பாஷைகளில் பேசத் தொடங்கிய போது, அங்குள்ள ஜனங்கள், "நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே, இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?" எனச் சொல்வதின் மூலம் பதிலளித்துள்ளதை அப்.2-ல் வாசித்துப்பாருங்கள் நிச்சயமாக இங்கு 'பாஷை'என்பது 'மொழியை' குறிக்கிறது. அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளில் அல்லது மொழிகளில் பேசினபோது, அவர்கள் புரிந்துகொள்ளமுடியாத ஒலியை உண்டாக்கவில்லை. மாறாக அவர்கள் தங்களுடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுடைய பாஷைகளில் பேசினார்கள், எனவே அவர்களால் இயேசுவைப்பற்றியும், இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் பேச முடிந்தது. இன்றைக்கு அந்நிய பாஷைகளில் அல்லது மொழிகளில் பேசுகின்றதோ அப்போஸ்தலர்களால் பேசப்பட்டது போலில்லை. அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென்று, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நடை முறையில் இருந்தது.

நவீனகால பெந்தெகொஸ்தெ மக்களின் இன்னொரு பழக்கம் தங்களுடைய கைகளை உயர்த்திக்கொண்டு எல்லா பக்கங்களிலும் சுழன்று பாடி ஜெபிக்கிறதாக இருக்கிறது. அவர்களுடைய செயல்கள் இவர்களை வழிநடத்தும் சமயம் இவ்விதமாக நடந்து கொள்ளப்பண்ணுகிறதோ என பார்ப்பவர்களை வினா வெழுப்பப் பண்ணுகிறது. நாம் இவ்விதமானப் பழக்கங்களைக் குறித்து வேதவாக்கியங்களில் வாசிக்கிறதில்லை.

இங்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொண்டிருப் பதாகவும், ஆனபடியினால் பரிசுத்த ஆவியின் **'வழிநடத்துதலை'** பெற்றிருப்பதாகவும் உரிமை பாராட்டுகின்ற ஜனங்களைக் காண்கிறோம், மேலும் நாம் வேதவாக்கியங்களுக்கு முரணான பல காரியங்களை அவர்கள் அநுசரிக்கிறதையும் போதிக்கிறதையும் காண்கிறோம். **முதலில், பரிசுத்த ஆவியின், ஞானஸ்நானத்தைப் பெற்றிருப்பதாக உரிமை பாராட்டுகின்ற போதிலும், அவர்கள்** தங்களுக்குள்ளாக **பிரிந்திருக்கிறார்கள் அநுசரிக்கின்ற, போதிக்கின்ற காரியங்கள் ஒவ்வொருவருக்கிடையே வேறுபட்டிருக்கிறது, ஒவ்வொருவரும் தாங்கள்**

**சரியானவர்கள் என்றும் மற்றவர்கள் தவறானவர்கள் என்றும் உரிமைபாராட்டுகின்றனர்.**

அடுத்ததாக, கிறிஸ்துவுடனே கூட ஐக்கியமாயில்லாமல் நாமங்களை தரித்துக்கொண்டு, 'பாவிகளின் ஜெபம்' என்ற ஜெபத்தினைக் கூறுவதன் மூலம் இரட்சிக்கப்பட்டுவிடலாம் என ஜனங்களுக்கு போதித்துக் கொண்டும், தங்களுடைய ஆராதனையில் வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிராத பல்வேறு பழக்கங்களை அநுசரித்துக்கொண்டும் சபைகளில் இருக்கின்ற இவ்வகையான ஜனங்களைப்பற்றி வேதாகமத்தில் நாம் வாசிக்கிறதில்லை. உதாரணமாக, 1. அவர்கள் ஆராதனையில் உயிரில்லா வாத்தியக் கருவிகளின் இசையை பயன்படுத்துகின்றனர் (எபே.5:19). 2. அவர்கள் வாரத்தின் முதல் நாளை காட்டிலும் மற்ற நாட்களில் காணிக்கைகளை வசூலிக்கின்றனர் (1கொரி.16:2). 3. வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய திருவிருந்தில் பங்கு கொள்ளாதிருக்கின்றனர் (அப்.20:7). வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆராதனையின் ஐந்து பாகங்களில், அவர்கள் ஐந்தில் மூன்று பாகங்களை நழுவ விட்டிருப்பது வியப்பாக இருக்கிறது! இவையனைத்திற்கும் மேலாக, புதிய ஏற்பாட்டில் பரிசுத்தஆவியானவரின் தூண்டுதலால் எழுதப்பட்டுள்ள வழிநடத்துதல்களை, இவர்கள் நேரடியாக பரிசுத்தஆவியின் வல்லமையால் தாங்கள் நடத்தப்படுவதாக உரிமை பாராட்டுகின்றனர்! இவற்றில், தங்களுடைய போதனையின் மற்ற பலவற்றில் இருப்பது போல, அவர்கள் தேவனுடைய பரிசுத்தஆவியானவரை தமக்குள்ளே முரண்பாடுள்ளவராக கொண்டிருந்திருப்பார்கள்!

'பாவிகளின் ஜெபத்தைக் குறித்து பேசுகையில்', பல சமய குழுக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை இரட்சிக்கப்படும்படிக்கு இதை திரும்ப திரும்ப சொல்லும்படி ஊக்கப்படுத்துகின்றன. இவ்விதமாக ஜெபத்தைச் சொல்லும்படி வேதத்தில் யாரையாவது வலியுறுத்தப்படுவதை நாம் எங்கும் வாசிக்கமுடியாது. மாறாக, கிறிஸ்து, சுவிசேஷமானது உலகமெங்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டு, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவன் இரட்சிக்கப்படுவான் என வாக்களிக்கின்றார் (மாற்.16:15,16).

கர்த்தரை விசுவாசித்து, இரட்சிக்கப்படும்படி அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய நீங்கள் அறிந்து, கர்த்தர் எதிர்பார்க்கிற சகலத்தையும் அறியும் படிக்கு உங்களை வேதவாக்கியங்களுக்குச் செல்லும்படி ஊக்கப்படுத்துகிறேன். இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் தாமே தாம் வாக்குத்தத்தம் பண்ணி அதற்காக மரித்தும், அதனுடைய இரட்சகராய், தம்முடைய நாமத்தைத் தரித்திருக்கிறதுமான தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்ளுவார். அதன்பிறகே நீங்கள் இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும்.



## வேதஅறிவுப்போட்டி எண் ௧௨ன் விடைகள்

1. தாவீது - சங்.25:15
2. ஆம் - ரோ.5:13
3. ஒரு தீங்கையும் அறியான் - பிர.8:5
4. பவுல் - 2கொ.4:8
5. நீதியை - ஏசா.26:10
6. கர்த்தரிடத்தில் - புல.3:40
7. கிருபை - எபே.4:7
8. தானியேல் - தானி.9:10
9. பவுல் - கொலோ.3:1
10. வெளிப்பட்டது - 2தெச.2:7

## வேதஅறிவுப்போட்டி எண் ௧௧ல் வெற்றி பெற்றவர்கள்



N. ஜான் செல்லையா - மதுரை
Mrs. மரகதம் திரவியம் - கோம்பை
J. ஐசக் - வண்ணார்பேட்டை
M. வேலு - கீழ்முருங்கை
G.P. ஏசையன்ராஜ் - கோபி
IRA. எத்திராசன் - சங்கரி
K. மோகன் - கொமாரபாளையம்
N.S. சங்கரலிங்கம் - லாஸ்பேட்டை
R. ஃகிப்ட் - ஒட்டநத்தம்
N. கமலவேணி - அயனாவரம்
R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
L. ஸ்டீபன் - காந்திகிராமம்
M. ராமசந்திரன் - ஒட்டநத்தம்
R. சாமுவேல் - ஊதியூர்

**ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள் யாக்கோபு 5:16**




**கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான் — எஸ்றா7:10**

பெண்கள் பகுதி

# "ஆதி மனிதன்"
## "Ancient Man"?

-*Betty B. Choate*



ஒரு நெருங்கிய கண்ணோட்டம் வேதாகமம் 'முற்கால' நாடோடி வாழ்க்கை முறை நன்கு வளர்ச்சியடைந்த நகர வாழ்க்கையோடு ஒத்துப்போகிறதாக இருக்கிறது எனக் காட்டுகிறது. சரியாக நாம் அறிந்திருக்கிறபடி இப்போது இது உண்மையாயிருக்கிறது. இன்றைய உலகத்தில் முற்காலப்பழக்கவழக்கத்தின் கீழ் தனித்த இடங்களில் வாழ்கிற கற்கால மக்கள் இங்கு இல்லையா குகைகளில் வாழ்கிற அல்லது கிடைக்கக்கூடிய குகைகளில் தொடர்ந்து வாழ்கிற மக்கள் அல்லது "தெரு மக்கள்" ஆக மாறியிருக்கிறவர்கள் இங்கு இல்லையா? இது எப்போதும் இருக்கின்ற பிரச்சனை, ஏனென்றால் மக்களுடைய சூழ்நிலைகள் உலகம் முழுவதிலும் பெரிய வித்தியாசமான முறையில் பரவி விட்டது.

இருந்த போதிலும், இதே உலகத்தில் மிகப்பழங்காலத்திய சமுதாயங்களோடு இன்று புத்திக்கெட்டாத அப்பாற்பட்ட விதத்தில் தொழில் நுட்ப அறிவின் மூலம் ஆர்வத்துடன் விண்வெளி கரம் உருவாயிருக்கிறது. தவிர நிபுணர்கள் தங்களுடைய பணித்தளங்களில் இருக்கின்றனர் என்பதை யார் மறுப்பார்கள்?

மேலும் உண்மையாக, தொல்பொருள் ஆராய்ச்சி குறிப்புகள் அதே காரியம் எப்பொழும் உண்மையாக இருக்கிறது என கூறுகிறது. ஆம் மனிதன் ஆரம்ப பரவலினால் 'நாகரீகமற்ற' 'கற்கால' மக்கள் உலகத்தில் பல பாகங்களில் குடியிருக்கின்றனர். ஆனால் தொல்பொருள் ஆய்வு ஆரம்பத்தில் தோண்டி எடுக்கப்பட்டவைகளில் முழுமையான வளர்ச்சியடைந்த நாகரீகங்களையே காண்பிக்கின்றது. நம்மால் புரிந்து கொள்ளமுடியாத அளவில் அவர்களது அறிவுத் திறமையினால் கட்டடங்களை கட்டினவர்களாகவும், பொருட்களை அப்புறப்படுத்தினவர்களாகவும், பொருட்களை உருவாக்கினவர்களாகவும் மிகப்பெரிய அளவில் அறிவுக்கூர்மை மிக்கவர்களாக அந்த மக்கள் இருந்தார்கள். இவைகளையெல்லாம் அவர்கள் எவ்வாறு செய்தனர்? இப்படிப்பட்டதான பூரண வளர்ச்சியுற்ற பண்பாடுகள் எவ்வாறு அங்கிருந்து உலகத்தினுள் பிரவேசித்தது என நிபுநர்கள் கூட அதிர்ச்சியுற்று வியப்படைகின்றனர்.

விந்தைகள் ஏராளம், இருந்தபோதிலும் அறிவியல் அறிஞர்களும் அகழ்வராய்ச்சியாளர்களும், பரிணாம கொள்கைவாதிகளும் கூட உண்டாயிருந்த உண்மையையும் பழங்கால நாகரீகங்களை உண்டாக்கியவர்களின் அறிவுக் கூர்மையைக் குறித்தும் ஒரு போதும் கேள்வி எழுப்புவதில்லை. அவர்கள் கட்டின பிரமிடுகள், அவர்கள் செதுக்கிய சிற்பங்கள், அவர்கள் எழுப்பிய ஒரே பாறையில் செதுக்கிய சிற்பங்கள், அவர்கள் விட்டுச் சென்ற பழங்கால சரிதைகள் எல்லாம் அவர்கள் வாழ்ந்தார்கள் என்பதை ஒருவனுக்கோ அல்லது பலருக்கோ நிரூபிக்க போதுமான சான்றுகள் ஆகும். இருந்த போதிலும் கூட பலவற்றில் அவர்களது வரலாற்றைப் பற்றின ஆவணங்கள் எழுதப்படாதவைகளாக இருந்து வருகின்றன.

அதே விதமான அறிவுபடைத்த அறிவியல் அறிஞர்களும் அகழ்வாராய்ச்சியாளர்களும் தேவனுடைய கரங்களிலிருந்து உருவான பிரமிக்கத்தக்கப் படைப்புகளைக் காணலாம். படைப்புகள் மிகப்பெரியவையும், கம்பீரமானவையும் அவர்களுடைய வேலைப்பாடுகள் எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்வதில் மனிதனால் பூமியின் மேற்பரப்பை மட்டுமே கீறிப்பார்க்க முடிகிறது. அத்துடன் மிகத்தெளிவாக எழுதப்பட்டுள்ள அவருடைய மகிமைபொருந்திய வரலாற்றின் ஆவணத்தை வேதாகம பக்கங்களில் கூட அவர்கள் காணமுடியும். மேலும் அவர்கள் அவருடைய பிரசன்னத்தைத் தொடர்ந்து மறுத்து வருகின்றனர் என்பது விந்தையில்லையா?

மனிதன் திறமைமிக்கவனாகவும் எந்த உயிர் வாழ்வனவும் கடந்து செல்லமுடியாத விண்மண்டலங்களையும் கடந்து செல்லக் கூடியவனாகவும், மகிமை பொருந்தியவரோடு ஆவிக்குரிய உறவு வைத்திருக்கிறவனாகவும், உருவாக்கப்பட்டான். நானும் அப்படித்தானே!

அமீபா மற்றும் குரங்கு மூலமாக மனிதன் தோன்றினானா?

வேதாகம விளக்கத்தின்படி மனிதன் தேவனுடைய கரத்திலிருந்து மனிதனாக வந்தான், தேவசாயலாக அறிவு மிக்கவனாக சிந்திக்கும் திறமையுள்ளவனாக யோசிப்பவனாகவும் “பழங்கால உலகின் அதிசயங்களைச்” செய்கிறவனாகவும் வேறு எந்த உயிர்வாழ்வனவும் கூட கடந்து செல்ல முடியாத விண்மண்டலங்களையும் கடந்து செல்லக் கூடிய திறமையுள்ளவனாகவும் ஆவிக்குரிய உறவு வைத்திருக்கிறவனாக வந்தான் நானும் அல்லவா!

**தேவனாகிய கர்த்தர்**
**மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி,**
**ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன்**
**ஜீவாத்துமாவானான் — ஆதி. 2:7**

# எல்லாம் உம்மாலே கூடும்
## All Things Are Possible Unto Thee

*-Glory Arjunan*



அன்பான சகோதரிகளே, 'தேவனாலே எல்லாம் கூடும்' என்பது மெய்யான வார்த்தை. அண்ட சராசரங்களை உண்டாக்கின நமதாண்டவராகிய இயேசு, "அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என்சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்றார்" (மாற்.14:36). நாமும் கூட பல காரியங்களுக்காக தேவனை நோக்கி உம்மாலே எல்லாம் கூடும். தேவனே, நான் பல மாதங்களாக இந்த காரியத்திற்காக உம்மிடம், முறையிடுகிறேன், உம்மால் கூடாதது ஒன்று மில்லையே, நீர் சொல்ல ஆகும், நீர் கட்டளையிட நிற்கும் என்று பல வசனங்களை சொல்லி பல வருடங்களாகக் கூட ஒரே காரியத்திற்காக ஜெபித்திருக்கிறோம். ஸ்திரீகளாகிய நமக்குச் சொல்லவேவேண்டாம், பிரச்சனைகளுக்கும், வாழ்க்கையில் ஏற்படுகிற பூகம்பங்களுக்கும் அளவே இருக்காது. ஆனால் அவைகளுக்காக ஜெபித்து ஜெபித்து சோர்வு ஏற்பட்டதுதான் மிச்சம் என்று சொல்லி அநேகர் தங்கள் விசுவாசத்தை விட்டுகூட விலகலாம் 'தேவனாலே எல்லாம் கூடும் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை' என்பது உண்மைதான், ஆனாலும் சில ஜெபங்களுக்கு 'கர்த்தருக்குக் காத்திரு' என்ற பதில் கிடைக்கிறது, இன்னும் சில ஜெபங்களுக்கு தேவனிடத்திலிருந்து எந்தவித பதிலுமே கிடைப்பதில்லை. தேவனை நோக்கி கூப்பிடுகையில் அவர் நம்மைக் காணாதவர் போலிருக்கிறார் என்றுகூட தோன்றும். பாருங்கள், நமதாண்டவர் இயேசுகிறிஸ்து, "அப்பா, பிதாவே, எல்லாம் உம்மால் கூடும் இந்தபாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும்" என்று ஜெபித்தார். தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனுடைய ஜெபத்தைக் கேட்டு அவருக்கு நியமிக்கப்பட்ட பாடுகளையும், மரணத்தையும் அவரிடமிருந்து எடுத்துப்போட்டாரா? இல்லை. இது நம்மை சிந்திக்க வைக்கிறது. கர்த்தருடைய ஜெபத்திற்கே பதில் கிடைக்கவில்லையென்றால் நம்முடைய சில ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமலிருப்பது ஆச்சரியமல்ல!

அன்பு சகோதரியே, உங்கள் வாழ்க்கையின் பிரச்சனைகள் தீரவில்லை, வேதனைகள் மாறவில்லை என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்று எண்ணி திகிலடைந்து, மிகவும் வியாகுலப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இவையனைத்தையும் இயேசு அநுபவித்தார். அவரது


ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டது, அவர் திகிலடைந்தார், மிகவும் வியாகுலப்பட்டார் (மாற்.14:33,34) எனவே நம்முடைய இருதயத்தின் வேதனையை அவரால் உணர்ந்து கொள்ளவும் புரிந்துகொள்ளவும் முடியும். நாம் நேசிக்கிற எந்த மஷனாலும் இதைச் செய்யமுடியாது. நம் ஜெபங்களுக்கு பதில் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கர்த்தர் நம்மோடிருக்கிறார், "அவர்.... நெரிந்த நாணலை முறிக்காமலும் மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்" (மத்.12:20). "....அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.8:28).

மேலும் வேதனைகளையும், கண்ணீரையும், துக்கங்களையும் கடந்து வருகிற அநேக ஸ்திரீகள், அச்சமயத்திலே தங்களோடு யாராவது இருக்கமாட்டார்களா, தங்களுடைய பாரங்களை பகிர்ந்து கொள்ளுவதற்கு உண்மையான தோழிகள் இருக்கமாட்டார்களா, நமக்காக யாராவது ஜெபிக்கமாட்டார்களா என்று ஏங்கக் கூடும். எனக்கு அநேக ஸ்திரீகள் போன் பண்ணி தன்னுடைய வேதனைகளை கண்ணீரோடு சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்வார்கள். அவர்கள் போனில் கண்ணீர்வடித்து காரியங்களை பகிர்ந்து கொள்ளும்போது என் இருதயமும் மிகவும் வியாகுலப்படும். இது மனித இயல்பு. மத்.26:38-ல் "அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி, தம்மோடு அழைத்துவரப்பட்ட பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று சீஷர்களை பார்த்துச் சொன்னார். ஆனால் அம்மூவருமே இயேசுவோடுகூட விழித்திருந்து ஜெபிக்கவில்லை. "....நீங்கள் ஒரு மணிநேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?" (மத்.26:40). என்று சொல்லி மூன்று முறை ஜெபித்துவிட்டு வந்து பார்த்தபோது மூன்று முறையும் சீஷர்கள் நித்திரைப்பண்ணிக்கொண்டிருந்ததைக் கண்டார். இயேசு தன் ஆத்துமாவில் கொண்டிருந்த துக்கத்தை அந்த சீஷர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. நித்திரை மயக்கத்தினால் அவர்களால் மறுமொழிகூட கொடுக்கமுடியவில்லை. இயேசு அவர்களைப் பார்த்து, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்றார். தாம் படப்போகிற பாடுகளின் போது அவர்கள் சோதனைக்குட்பட்டு விழுந்துபோகாதபடிக்கு அவ்வாறு கூறினார். நம்முடைய கஷ்டத்தின் நேரத்தில் மற்றவர்கள் நம்மோடு சேர்ந்து ஜெபிக்க விரும்புகிறோம். ஆனால் 'மனுஷனுடைய உதவி விருதா என்பதை மறந்துபோகக்கூடாது. இயேசுவோடு சீஷர்கள் ஜெபிக்கச் சென்றார்கள், ஆனால் அவரோடு கூட விழித்திருந்து, அவருடைய ஆத்துமாவியாகுலத்தை அறிந்தவர்களாயிருந்து ஜெபிக்கவில்லை. ஆனால் தேவன் இயேசுவை பலப்படுத்தும்படி, "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" (லூக்.22:43) என்று வாசிக்கிறோம். இது தான் தேவ அன்பு. நம்மையும் பலப்படுத்துவாரல்லவா?

இயேசுவின் ஜெபத்திலிருந்து மேலும் ஒரு பாடத்தை கற்றுக்கொள்வோம். "....இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்" (மாற்.14:36). நாமும் நம் வேதனைகளை சகித்துக்கொள்ளமுடியாமல் என் கஷ்டத்தை நீக்கிவிடும், இந்த துன்பத்தின் பாத்திரத்தை என்னை விட்டு எடுத்துப்போடும் என்று ஜெபிக்கிறோம். ஆனால் 'என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய விருப்பத்தின்படியே ஆகட்டும் என்று ஜெபிப்பதில்லை. அன்பு சகோதரியே, நமக்கு முன் இருக்கிற புயலையும், காற்றையும், பூகம்பத்தையும் பார்ப்போமானால் நாம் விசுவாசத்தை விட்டு விழுந்துபோவோம். நம்முடைய பாரம் சுமப்பதற்கரிதானதாக இருந்தாலும், அது எப்பேர்பட்ட இழப்பைக் கொண்டுவந்தாலும் இயேசுவைப்போல 'ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று சொல்லுவோம். சோதனைகளும். வேதனைகளும் தேவனையறியாதவர்களுக்கு வராது. துன்மார்க்கனும், பொய்களை ஊதுகிறவர்களும் வாழ்வில் வளமுடனே இருப்பார்கள். "தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்ற வசனம் மாறாதது. சகோதரியே, நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிருப்பீர்களென்றால் நீங்கள் துன்பப்படுவீர்கள். உம் சித்தம் தேவா ஆகட்டுமே என்று சொல்லி நம்மை அர்ப்பணிப்போம்.

இவ்வளவு, பாடுகளை சகித்து தம்முடைய ஜெபத்தின் மூலம் பல பாடங்களை நமக்குக் கற்றுகொடுத்த இயேசுவானவர் அப்படியே மரித்து மண்ணோடு மண்ணாக போய்விட்டாரா? இல்லை. நிச்சயமாக இல்லை. அவர் மரணத்தை வென்றார். மூன்றாம் நாள் உயிரோடெழுப்பப்பட்டார். பிதாவானவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை மரணப்பிடியிலிருந்து விடுவித்து தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரச் செய்துள்ளார். என்ன அற்புதம் இது!


அன்பு சகோதரியே, தேவனால் எல்லாம் கூடும். இது மாற்றமுடியாதது, மறுக்க முடியாதது. ஆனால் நம்முடைய ஜெபத்தில் நம் விருப்பத்தின்படியல்ல, தேவனுடைய விருப்பத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம். நம்முடைய இயேசுவின் ஜெபமே நமக்கு மாதிரியாக இருக்கட்டும். இயேசுவை உயர்த்தின தேவன் நம்மையும் உயர்த்துவார். அவருடைய சித்தம் மட்டுமே செய்ய நம்மை தேவன் தாமே பலப்படுத்துவாராக!

ஒரே வழி
வேதாகம பாடம்
எங்களிடம் உள்ளன
எழுதி பெற்று
சத்தியத்தை
அறிந்து கொள்ளுங்கள்

# சுவிசேஷம்
## *The Gospel*

*-Daniel Durairajan*




ஒலிவமலையின் தாழ்வான பகுதியிலிருந்து மேற்கே எருசலேம் நகரம். யோர்தானுக்கு கிழக்கே அரேபிய பாலைவனத்தையும் பார்த்து தம் சீஷர்களை, **"நீங்கள் உலகம் முழுவதும் புறப்பட்டு போய்...(மாற்கு16:15)**

சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்றார்.

**சுவிசேஷம் என்றால் என்ன?**

**God - Story "தேவனைப்பற்றின விருத்தாந்தம்"** (or) விவரம். அநேகசமயங்களில் இது நற்செய்தி **Good News** என்றும் வழங்கப்படுகிறது.

**உலகில் பல தரப்பட்ட நற்செய்திகளுண்டு**

**a.** இரண்டு நாடுகளின் யுத்தத்தை நிறுத்தி ஒப்பந்தம் ஏற்படுத்துவது - நற்செய்தி.

**b.** ஆஸ்தியில் அதிக பங்கு கிடைப்பது - நற்செய்தி! விரும்பியவரை மணமுடிப்பது - நற்செய்தி!

**தேவனுடைய நற்செய்தி எது?**

தேவனுடைய திட்டமும் விருப்பமும் வழியும் எதுவென்பதை உலகம் அறிந்து கொண்டு அதினால் மீட்கப்பட வேண்டும் - இதுவே தேவனுடைய நற்செய்தி.

**யோவான் 8:31-32 "சத்தியத்தை ஆழமாக கற்று புரிந்து கொள்வதால், விடுதலை பெறுங்கள் ஏனெனில் அந்த சத்தியமே உங்களுக்கு விடுதலையை பெற உதவிசெய்யும்"**

**சுவிசேஷம் - தேவனுடைய வார்த்தை - சத்தியம்** என்ற பதங்களில் வெவ்வேறு இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் நாமகரண கூட்டத்தார் இதை வேறு பிரித்து பார்க்க முயற்சி செய்கின்றனர்.

**சட்டத்தின் மூலக்கூறுகளையும், தேவ திட்டத்தையும் மறுதலிக்கச் செய்ய வகை தேடுகின்றனர் விளைவு - கீழ்ப்படியாமை.**

சிலுவையை பற்றிய உபதேசத்தையும் - அடிப்படை சத்தியங்களையும் கேலி பண்ணி பேசுகின்றனர்.

**இதன் காரணமாக இரண்டு தவறுகள் உண்டாயின**

**முதலாவது:** கிருபையை பெற கீழ்ப்படிதல் அவசியம்

கிருபை தேவ பங்கு - கீழ்ப்படிதல் மனித பங்கு (1பேது.1:22; எபி5:8) இதை அவசியமற்றது என்கின்றனர்

**இரண்டாவது: சட்டம்**

கிரியையினால் நீதிமானாவதை வலியுறுத்துகிறது. ஆகவே கிருபையின் பிரமாணத்திற்கு விசேஷித்த வழிமுறைகள் எதுவும் கிடையாது.

தேவன் தம்முடைய பிள்ளைகளை விசேஷித்த வழியில் எப்படியாவது நடத்துவார் என்று **ஆதாம் - ஆபிரகாம்** போன்றவர்களை உதாரணப் படுத்துகின்றனர். இது அவர்களுக்கு சரிதான். காரணம் அவர்கள் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பே இருந்தார்கள் - ஆனால்

**கிருபையினால் கிடைக்கும் இரட்சிப்புக்கு கீழ்ப்படிதல் அவசியம் தேவை - கீழ்ப்படிதல் எல்லா காலத்திலும் (பழைய, புதிய ஏற்பாட்டுகாலம்) வாழும் அனைவருக்கும் கொடுக்கப்படும் தேவ சட்டமாகும்.**

**பகுதி 2: இந்த சுவிசேஷத்திற்கு மூன்று பண்புகள் உண்டு அவை**

**சுவிசேஷம் ஒரு மனுஷனை சிறந்தவனாக மாற்றுகிறது.**

**1. சுவிசேஷம் சத்தியம் குறிக்கோளையுடையது - (Truth) Gospel is a objective**

தனிப்பட்ட மனிதனிடத்திலிருந்தோ (or) ஒரு பொருளிலிருந்தோ வராமல் - வெளியிலிருந்து, தனிப்பட்ட இடத்திலிருந்து வருகிறது.

இது தன்னுடைய வெளிப்பாட்டை வெளிப்படுத்த, எந்தவொரு மனிதனையும் சார்ந்திருப்பதில்லை. ஒருவனுக்கு தெரிகிறதோ இல்லையோ அல்லது விசுவாசிக்கிறானோ இல்லையோ - சத்தியம் அதே இடத்தில் அதே மாதிரியாகத்தானிருக்கிறது - இது சத்தியமாகத் தானிருக்கிறது.

இதனுடைய உண்மை தன்மையின் வெளிப்பாட்டிற்கு **"சூழ்நிலைகளையோ" (Environment) "காரண காரியங்களையோ" (Logic)** சார்ந்திருப்பதில்லை.

ஒரு முறை சதுசேயர்கள், சூழ்நிலையையும், காரண காரியங்களையும் பயன்படுத்தி சத்தியத்தை ஓரங்கட்ட முயற்சித்தனர் மத்.22-ம் அதிகாரம்

சதுசேயர் - உயிர்த்தெழுதல் பொய் என்றனர். ஏழு கணவன்களை திருமணம் செய்த பெண் உயிர்த்தெழுதலில் யாருக்கு மனைவி என்று கற்பனைக்கு அப்பாற்பட்ட நிலையில் - ஒரு கேள்வி கேட்டனர் இயேசு **மத்.22:29-ல்** எளிதாக பதில் கூறினார்.

நித்தியம் - என்ற சத்தியத்தின் உண்மை உண்மையாகவேயிருக்கிறது.

**மத்.7-ல்** குறுகலான பாதையில் நடக்க ஆண்டவர் அழைக்கிறார்.

**எரே.10:23-ல் "மனிதனுடைய நடைகள் நடக்கிற அவனால் ஆவதில்லை"** ஆக தேவனுடைய வழி - மனிதனுடைய வழியைப் பார்க்கிலும் **"மேலானது", "உயர்வானது", "ஒழுக்கமானது"**.

ஒருவேளை அவர்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி! சத்தியம் தன்னுடைய குறிக்கோளைவிட்டு பின்வாங்காது - சத்தியம் தன்னுடைய தன்மையிலிருந்து மாற்றம் பெறாது. **Truth is an objective**

**2. தேவனுடைய சத்தியமானது மாறாதது (or) மாற்றத் தக்கதல்ல (God`s Truth is Changeless)**

தேவன் எவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறாரோ அவைகள் எல்லாம் நித்தியமானது நிலையானது.

மோசேயிடம் கொடுக்கப்பட்ட தேவனுடைய சட்டமானது நிறைவேறியது **மத்.5:17,18.**

இது மாறவேயில்லை. ஒருவேளை, இது ஒரு தற்காலிக நிலையில் கொடுக்கப்பட்டது என்றாலும் பிறகு இது நிறைவேற்றமடைந்தது.

**"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" மத்.24:35.**

பேதுரு சொல்லுகிறார்: "வாக்குத்தத்தமானது...தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" **அப்.2:39.**

பேசப்பட்ட நாள்முதல் - நியாயத்தீர்ப்பு நாள் வரையிலும் ஆண்டவருடைய வார்த்தை நிலைத்திருந்து - இறுதியில் நியாயம் செய்யும் **யோவான்12:48** - ஆண்டவருடைய வார்த்தை காலத்தால் தொடர்புடையதல்ல, சாதி தேசிய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது.

இன்றைக்கு எவ்வளவோ காரியங்கள் உண்மையோடு தொடர்புடையது ஆனால் அவைகள் தற்காலிகமானவைகள். தேவனுடைய சத்தியம் மாத்திரமே நித்தியமானது - நிலையானது.

உதாரணம் பூமியின் படைப்பு சூழல்களில் பல மாற்றங்கள் ஏற்படலாம் ஆனால் பூமியின் சிருஷ்டிப்பை பற்றின "சத்தியம்" மாறாதது.

**3. மூன்றாவதாக சத்தியமானது நம்முடைய மகிழ்ச்சிக்கும், பூரணத்துவத்துக்கும் காரணமாயிருக்கிறது. (Source of Perfection and Happiness)**

மத்தேயு எழுத்தாளரின் மூலமாக, மனிதனுடைய மகிழ்ச்சிக்கு என்ன வழியென்பதை ஆண்டவருடைய முதல் பிரசங்கத்தின் மூலமாக அழகாக சொல்லியிருக்கிறார் **மத்.5:1-12** - பாக்கியமான மனிதனுடைய ஆசீர்வாத சட்டங்கள் யாவும், தற்காலிக கலாச்சார நடைமுறைகளைப் பார்க்கிலும மேலானது. அவைகள் நித்தியமானவைகள்.

தேவனுடைய வழியில் ஒருவன் நடக்க தன்னுள்ளத்தை ஒழுங்கு படுத்தும்போது அவனுக்கு கண்டிப்பான மகிழ்ச்சி உண்மையாய் கிடைக்கும்.

இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் மைய வார்த்தை **"மகிழ்ச்சி" (Rejoice)** பிற்காலத்தில் பவுல் கூட **"கர்த்தருக்குள் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள்" ....பிலி.4:4** என்றார்.

ஆகவே தேவனுடைய சத்தியம் ஒரு நோக்கமுடையது. இது மாறாதது. இதுவே மனிதனுக்கு நிரந்தரமானது மகிழ்ச்சியை தருகிறது. வேதாகமத்தை குறை சொல்லுகிறவர்கள் வேதாகமத்தை விட இந்த உலகில் சந்தோஷம் தரக்கூடிய எவ்வளவோ உண்மைகளுள்ளது என்கின்றனர்.

சரிதான்! அநேக காரியங்கள் உண்மையானவைகள்தான் உண்மேயோடு தொடர்புடையவைகள்தான் **ஆனால் "குறிக்கோளையுடையதல்ல" (Objective) நித்தியமானதல்ல (Eternal) மகிழ்ச்சியை தரக்கூடியதல்ல (Joy Producing)**

ஒருவருடைய "எடை" **(Weight),** "வயது" **(Age),** விலாசம் **(Address)** இவைகள் உண்மையானவைக்ள்தான் தஸ்தாவேஸ்துகளின்படி சரியானவைதான் ஆனால் எந்த வகையிலும் நித்தியத்தோடு தொடர்புடையதல்ல.

**முடிவுரை:** கிறிஸ்துவையும் - கிறிஸ்துவினிடமும் கற்று தேர்ச்சியடையும் வழியையும் - வாழ்க்கையின் தெளிவான பாதையையும் தம்முடைய தீர்மானத்தின் முழு எல்லைகளையும் நமக்கு அருளின பிதாவாகிய தேவனுக்கு நன்றி சொல்லுவோம்

மீண்டும் **யோவான்8:31,32** வாசித்து முடிப்போம்.

## நடப்புச் செய்திகள்

1. உலகம் அங்கீகரித்தாலும், அங்கீகரிக்காவிட்டாலும் இந்தியா அணு ஆயுதம் படைத்த நாடுதான் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியுள்ளார்.
2. மணியார்டர் அனுப்பிய நாளன்று பணத்தைபெற்றுக்கொள்ளும் வசதி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் பால அதிசயநாதன் தெரிவித்துள்ளார்.
3. நிலவில் ஆய்வுக்கூடம் அமைத்து செவ்வாய் கிரகத்தை ஆராய திட்டம் இருப்பதாக 'சந்திராயன்' திட்ட இயக்குனர் மயில்சாமி தெரிவித்துள்ளார்.
4. அழுக்குபடிய விடாமல் சுத்தப்படுத்திக்கொள்ளும் கண்ணாடிகளை செயின்ட்கோபைன் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.
5. கர்நாடகாவில் 2000-ம் ஆண்டில் கிறிஸ்தவ தேவாலயங்களில் வெடிகுண்டுதாக்குதல் நடத்திய வழக்கில் 11பேருக்கு தூக்கு தண்டனையும், 12பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கி சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -14

# கிறிஸ்துமஸ் - CHRISTMAS

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203.
S.INDIA.
Mobile: 94444 43378

**நீ**ங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள், அந்த சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப்பலன் தருகிறதுபோல....கொலோ.1:6 உலக இரட்சகர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 25 ஆண்டுகளுக்குள்ளாக....எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட்டது" லூக்.24:47. அவரின் கடைசி பெரிய கட்டளைகளை அப்போஸ்தலர்கள் நிறைவேற்றினார்கள். பெந்தெகொஸ்தே நன்னாளில் எருசலேமில் ஒன்றுகூடிய பக்தியுள்ள யூதர்கள் பேதுருவினால் முதன் முதலாக பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தியை கேட்டு, விசுவாசித்து, பாவஅறிக்கையிட்டு, மனந்திரும்பி 3000 ஞானஸ்நானம் பெற்றனர். நாடுதிரும்பிய அவர்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தார்கள் (அப்.8:4). மற்றும் சமாரியா, எத்தியோப்பியா (எகிப்து) அப்.8-ம்அதிகாரம். ஆசியாமுழுவதும் அப்.19:26 விக்கிரக ஆராதனைக்கு பெயர்போன ஆசியாவின் எபேசு பட்டணத்தில் மகாதேவியாகிய தியானாளின் விக்கிரகத்தொழில், மற்றும் ஆராதனை நின்றுபோகும்படியாக பவுலடியாரின் பிரசங்கம் வழிவகுத்தது. கி.பி 52-ல் தோமாவினால் தென்னிந்தியா, மற்றும் வடபகுதிகளிலும் சுவிசேஷத்தின் பலனாக 6000 பேர் கீழ்ப்படிந்தனர்.

ரோம அரசன் கான்ஸ்டான்டின் ஞானஸ்நானம் பெற்றதுடன் யூத முறையிலான ஆராதனையை மாற்றி சனிக்கிழமை ஓய்வுநாளுக்கு (Holiday) பதிலாக, சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட, கிறிஸ்து உயிர்த்தெழுந்த முதல் நற்செய்தி அறிவிக்கப்பட்ட, திருச்சபை தொடங்கப்பட்ட கர்த்தருடைய நாளாகிய வாரத்தின் முதல் நாளான (Holyday) ஞாயிற்று கிழமையை பசுரித்த நாளாக அரச கட்டளையாக அறிவிக்கப்பட்டதுடன், எல்லாரும் அதனை கைக்கொள்ளவும் ஆணையிட்டான். இதன்பிறகு கி.பி25.12.336-ல் ரோமர்கள் வழிபட்ட சூரியனை வழிபடவும், மன்னர் "அறிலியஸ்" (AURELIUS) பிறந்த நாளை கொண்டாடுவதற்கு பதிலாக இரண்டாம் ஆதாம் (முதல் ஆதாம் 6-ம் நாளில் உண்டாக்கப்பட்டதை போல) இயேசுகிறிஸ்துவின் பிறந்தநாளாக முதன்முதலில் ஜனவரி 336-ம் நாள் கொண்டாடப்பட்டது. இதனை எகிப்தின் அலெக்சாண்டிரியா மற்றும் கிழக்கத்திய நாடு (அரேபியா) களில் கொண்டாடினர். வேதாகமத்தில் இவ்விதமான பண்டிகை கொண்டாடப்பட வேண்டுமென இயேசுகிறிஸ்துவோ அல்லது அவரின் சீடர்களோ கட்டளையிடவோ, அவர்கள் ஆராதிக்கவோ இல்லை என்பதை சிந்திப்போமாக! அதன்பிறகு மேலும் சிலர் எழும்பி தங்களின் விருப்பம் போல தேவனை ஆராதிக்க தொடங்கினர். கத்தோலிக்கர்கள் வேதாகமத்தில்

காணப்படாத இவ்விதமான ஆராதனைகளை செய்ய ஆரம்பித்தனர்.

LOW MASS ரோமர்களின் அடிமைகள் இருட்டோடே ஆலயத்திற்கு சென்று பாட்டு பாடாமல், பிரசங்கத்தை கேட்காமல் தாங்கள் மட்டும் ஜெபித்து வந்தனர்.

SUNG MASS இவ்வாராதனையில் பாட்டு பாடுவார்கள். ஜெபிப்பார்கள்.

HIGH MASS இது உயர்வான சிறப்பு ஆராதனை, இதில் பாடல், ஜெபம், பிரசங்கம், காணிக்கை திருவிருந்து பங்கிடப்படும்; சிறப்பாக இறந்தவர்களுக்காக ஜெபவேண்டுதல் ஏறெடுக்கப்படும்.

DRY MASS இதில் பிரசங்கியார் இல்லாதபோது அவரின் உதவியாளர்களால் நடத்தப்படும் ஆராதனையாகும்.

GREGORIAN MASS கிரிகோரியன்மாஸ், இதில் சிறப்பாக குறிக்கப்பட்டவைகளுக்காவும், குறிப்பிட்ட நிகழ்வுகளுக்காக இறந்துபோன சிறப்பானவர்களுக்காகவும் தொடர்ந்து பல நாட்கள் செய்யப்படும் ஆராதனையாகும். மேலே கூறிய ஆராதனை முறைகளோ (கிறிஸ்மஸ் உட்பட) தேவனால் கட்டளையிடப்படவில்லை. மேலும் 40 நாட்கள் லெந்து நாட்களாக வழிபடவும், ஈஸ்டர் பண்டிகை, கிறிஸ்துவின் படத்திற்கு மாலையிட்டும், விளக்கேற்றியும், அதனை வணங்கி, வழிபட்டு வருவதும் வேதாகமம் கூறும் ஆராதனை அல்லவே, அல்ல.

மோசேயின் பிரமாணத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்த இயேசு இரட்சகர், யூதர்கள் கடைபிடித்து வந்த பஸ்காவைப்புசிக்கஆசையாயிருந்தேன் லூக்22:15 என்றதுடன் அவரின் சீடர்களுக்கு தனது மரணத்திற்கு பிறகு அவர்கள் கடைபிடிக்க வேண்டிய "புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்" (எரே.31-34) லூக்.22:15-29; மாற்கு14:22-25; மத்.26:26-29. ஆனால் இன்று சபைகளில் நடத்தப்படும் ஞாயிறு ஆராதனையில் திருவிருந்து மாதத்திற்கு ஒரு முறையோ ஆண்டுக்கு சில முறையோ அவர்கள் விருப்பம்போல கைக்கொள்ளுகிறார்கள். அப்.20:7; 1கொரி.16:2-ன்படி வாரத்தின் முதல் நாள் தோறும் கடைபிடிக்க வேண்டிய கட்டளையை மறந்துவிடுவது எத்தனை கோபாக்கினைக்குரியது என்பதை எண்ணிப்பார்க்கக் கடவோம். இதற்கு பதிலாக டிசம்பர் 25-ம் தேதி மட்டும் கிறிஸ்துவின் பிறப்பினை கொண்டாடி (அவர் சொல்லாததை, விரும்பாததை) வருவது யாருக்கு நன்மை? ஞாயிறு ஆராதனையில் (1) பாடல்கள் (2) ஜெபங்கள் (3) வேதவகுப்பு (4) கர்த்தருடைய பந்தி (5) காணிக்கை ஆகிய **இவ்வைந்து செயல்கள் ஒன்று தவறினால் கூட அது முழுமையான தேவன் விரும்பும் ஆராதனை ஆகாது.** அவைகளால் ஆசீர்வாதம் கிடைக்காது என்பதுடன் அவை குற்றப்படுத்தக்கூடியதாக உள்ளது கொலோ.2:16,17,19 மனுஷனுடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடப்பதென்ன? "இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும் .....இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிக்கும் பிரயோஜனப்படாது" (வசனம் 21,23). எனவே கிறிஸ்துமஸ்விழா, கிறிஸ்மஸ் மரம், நட்சத்திரம், (STAR)மெழுகுவர்த்தி ஏற்றுதல் மற்றும் பல மனித நடவடிக்கைகளை

கைக்கொள்வது தேவன் கட்டளையிடாத செய்லாகும். மேலும் பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் தேவன் அவனுக்கு (மட்டுமே) செவிகொடுப்பார் (யோவா.9:31).

(கி.மு.712-ல்) "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; (Lip Service) அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. .....மனுஷனாலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது என்று ஏசா.29:13 கூறியதை நன்கு அறிந்த இயேசுகிறிஸ்துவும்.....வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றார் மத்.15:6-9; யாக்.3:17; மாற்.7:6-8 வாசியுங்கள், சிந்தியுங்கள்.

**இன்றைய காயீன்கள்**

தேவன் கட்டளைகளை கடைபிடிக்காமல், தம் சொந்த வழியிலே நடந்து ஆராதனைச் செய்வது பொல்லாங்கனாகிய காயீன் வழிச் செல்லாமல் 1யோவா.3:12..... இயேசுவானவர் நமக்கு உண்டாக்கின புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணின வழியாய் ஆராதிப்போம். எபி.10:19-22 விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அப்படியில்லாவிட்டால் பிதாவும், குமாரனும் நம்மைப் பார்த்து ..... "இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து .....பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள். யூதா11 என்றவர்களாவோம். இன்றைய உலகிலே எண்ணற்ற மதங்களும் கோடிகணக்கில் இவ்வுலகில் வாழ்ந்திராத தெய்வங்களும் மனிதனால் உண்டாக்கப்பட்டு, வணங்கப்பட்டு வருகிறது. ரோமர்களும் தங்களின் தெய்வங்களோடு கிரேக்க கடவுள்களையும் சேர்த்து வழிபட்டனர். இன்னும் நாம் கட்டுக்கதைகளுக்கு செவிகொடாமல் கிறிஸ்து மூலம் வழங்கப்படும் இரட்சிப்பை பெற்று அப்.4:12 அவருக்கு பிரியமாய் வாழ்வோமாக! மற்றவர்களுக்கும் அறிவித்து, அவர்களையும் அழைப்போமாக!

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை விழாவாக ஆண்டுக்கொருமுறை டிசம்பர்25-ல் கொண்டாடாமல் ஒவ்வொருநாளும் நம் இருதயத்தில் அவர் வசிக்க இடம் கொடுத்து அவர்கட்டளையிட்டவைகளை மட்டும் செய்வோம். அவரின் இறுதி கட்டளையை ".....அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கக்கடவோம்" லூக்.24:47. நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு (நமக்கு) உபதேசம் பண்ணும்போது அவர் நம்முடன் உலகின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நம்முடனேகூட இருக்கிறார் என்பதை மறவாதேயுங்கள் மத்.28:20.

எனவே நாம் மனித கற்பனைகளையும், கட்டளைகளையும் கைக்கொண்டு வாழாமல் "**நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவோம்**" 1யோவா.5:2.

"**.....அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல**" 1யோவா.5:3.


சமீபத்தில் இயேசுகிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக்கொண்ட **சகோ.M.வேனு,** 245 செந்தாமரை நகர், வேதபுதுபேட்டை, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடலாமா? என்ற அவரது கேள்விக்கு பதிலளிக்கவே இவை எழுதப்பட்டது.

இது குறித்து உங்களுடைய கருத்துக்களை வரவேற்கிறோம்
எனது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். நன்றி.

வாலிபர் பகுதி

# நான் இப்பொழுது ஒரு கிறிஸ்தவன்

## *Now That I Am A Christian* -Tim Childs TVOTI



இப்பொழுது நான் "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்திருக்கிறேன்" நான் ஆவியிலே வளரும்படி, "திருவசனமாகிய ஞானப்பாலின் மேல்" மிகவாஞ்சையுள்ளவனாக இருப்பேன் (1பேது.2:2,3). நான் விசுவாசத்தில் குழந்தையாகவும் பலவீனனாகவும் இருக்கையில், நான் என்னுடைய வளர்ச்சியில் பலவீனனாக இருக்கிறேன் என்பதை நான் நினைத்துப் பார்க்கவேண்டும். சாத்தான் என்னுடைய இருதயத்திலிருந்து வசனத்தை திருடவிரும்புகிறான், இல்லாவிடில் தேவனுக்கென்று நான் கனிகொடுக்க இயலாதவனாயிருக்கப்பண்ணுகிறான் (மத்.13:18-23). இயேசு, "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவா.15:8) என்றார். இதற்கென்று என்னை அழைத்துக் கொண்டு வந்தது தேவனுடைய வார்த்தை என்பதை நான் கண்டிப்பாக நினைக்கவேண்டும். மேலும் என்னை ஆவியில் தேறினவனாகவும் விசுவாசத்தில் பலப்படுகிறவனாகவும் செய்கிறவை தேவனுடைய வார்த்தையே என நான் கண்டிப்பாக நினைக்க வேண்டும் (2தீமோ.3:14-17).

இப்போது நான் எனக்காகவுள்ள தேவனுடைய அன்பை புரிந்துகொண்டுள்ளேன், நான் திரும்ப அவரை நேசிக்கவும் அவருக்கென்றுள்ள என் அன்பை நிரூபிக்கவும் விரும்புகிறேன் (யோவா.3:16; 1யோவா.4:19). யாக்கோபு தன் நிருபத்தில் தன் வாசகர்களுக்கு அறிவுறுத்துகிறதுபோல், நான் அவரைக் கிட்டிச் சேருவதன் மூலம், என் அன்பை வெளிப்படுத்த தயாராக உள்ளேன் (யாக்.4:8). மேலும், நான் தேவனுடைய ஆலோசனையை தேடி, அதில் நடந்து அவருடைய குமாரனுக்குக் கீழ்ப்படிவேன் (யோவா.14:15). தேவன் அவரை கர்த்தராகவும் (அப்.2:36), சபைக்குத் தலைவராகவும் (எபே.1:22,23) ஏற்படுத்தியிருக்கிறார். நான் கேள்விபடுதலில் மட்டும் திருப்தியுடையவனாக இருந்து என்னை வஞ்சித்துக்கொள்ளமாட்டேன். நான் தேவனுடைய வார்த்தையின் படி செய்கிறவனாகயிருப்பேன் (யாக்.1:22).

இப்போது நான், தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த இயேசுவின் இரத்தத்தினாலே கழுவபட்டுள்ளேன், பரிசுத்தமாக்கப்பட்டுள்ளேன், நீதிமானாக்கப்பட்டுள்ளேன், இனி ஒரு போதும் நான் வேசித்தனம், விபசாரம் அல்லது சுயபுணர்ச்சி, போன்ற மாம்சத்தின் கிரியைகளில் சிக்கிக்கொள்ளமாட்டேன் (1கொரி.6:9-11). நான் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டபடியினால், நான்


என்னுடையவனல்ல. நான் இப்போது தேவனுக்குரியவன் (1கொரி.6:15-20). நான் பாவத்தின் வாழ்க்கை முறையில் தொடர்ந்து இருப்பதின் மூலம் தேவனுடைய கிருபையை உதாசினப்படுத்தும் எந்த இச்சையையும் கண்டிப்பாக மறுக்கிறேன். நான் இப்போது பாவத்திற்கு மரித்து நீதியாகிய தேவனுடைய வல்லமைக்கென்று பிழைத்திருக்கிறேன் (ரோம.6:1,2). இயேசுகிறிஸ்துவின் வல்லமை மற்றும் ஐக்கியம் போன்றவற்றிலிருந்து என்னை தனியே பிரிக்கின்ற எந்த பாவம் அல்லது மாம்சத்தின் கிரியை எதுவாயிருந்தாலும் அவைகளை நிச்சயமாக என்னைவிட்டு எடுத்துப்போடுவேன். குடிப்பழக்கமும் சட்டத்திற்கு விரோதமாக எந்தக் காரியங்களும் இதில் அடங்கும். சுவிசேஷத்தின் மூலம் எல்லாவிதமான தீங்கையும் மேற்கொள்ள தேவன் என்னை பலப்படுத்துவார். அத்தோடு என்னை இனி ஒருபோதும் பாவம் ஆளுகைசெய்யாது (ரோம.6:14).

இப்போது இயேசு என் பாவங்களை சிலுவையில் சுமந்து தீர்த்துவிட்டார் என்பதை கற்றிருக்கிறேன், நான் அவரை மென்மேலும் சிலுவையில் அறைந்து அவரை அவமானப்படுத்த மாட்டேன் (எபி.6:6; ஏசா.53:6).

இப்போது நான் தேவன் தம்மை இயற்கையின் மூலம் மட்டுமல்லாது, பரிசுத்த வேத வாக்கியங்களின் மூலமும் வெளிப்படுத்தியுள்ளார் என அறிகிறேன். ஒருவராய் துதிக்கும் கனத்துக்குமுரிய அவரை நான் வாரத்தின் முதல் நாளில் தேவனுடைய பிள்ளைகளோடு கூடி அவரை "ஆவியோடும் உண்மையோடும்" தொழுதுகொள்ளுவேன் (யோவா.4:24; எபி.10:25). அவர் உண்மையாய் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்களையும், அவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்களைப் போஷித்து காப்பாற்றுகிறார் என்ற அறிவைப் பெற்றவர்களையும் தேடுகிறவரானபடியால் நான் அவரை உண்மையாய்த் தொழுதுகொள்ளுவேன்.

இப்பொழுது நான், தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, அவருடைய குமாரனுக்கு சிநேகிதராக, அவருக்கு உண்மையின்படியும், நீதியின்படியும் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்காக பரலோகம் ஆயத்தமாயிருக்கிறது என்பதை அறிந்திருக்கிறேன், நான் என்னுடைய அன்றாட வாழ்வில் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி அவரைப் பின்பற்றுவேன், நான் பரலோகத்தின் வாசலுக்கு வைராக்கியத்தோடே காத்திருப்பேன் (எபி.11:10).

புது வருடம்



புதிய மனுஷனாய் மாற
புதிய ஊழியங்களை செய்ய
புதிய அநுபவம் பெற்றிட
புதிய அத்தியாயம் படைத்திட
புதிய ஆத்துமாக்களை சந்தித்திட
புதிய ஏற்பாடு சத்தியத்தை எடுத்துரைக்க
புதிய தீர்மானங்களை எடுக்க
புதிய பெலனைப் பெற்றிட
புதிய வஸ்திரம் பெற்றிட

2009



# மெலித்தா

சிறுவர் பகுதி

*வேதபகுதி:*
*அப்போஸ்தல நடபடிகள்28:1-10*

**ம**த்தியதரைக் கடல் பகுதியில் இருக்கக் கூடிய ஒரு தீவின்பேர்தான் மெலித்தா. இந்த தீவில் இருந்தவர்கள் அன்பு செலுத்துவதில் வல்லவர்கள். ஒரு முறை பவுல் கைது செய்யப்பட்டு கப்பற் பயணத்தில் இருக்கும்போது இந்த தீவிற்கு சென்றார். அப்பொழுது மழைக்காலமாக இருந்தபடியால் அத்தீவார் குளிருக்காக நெருப்பை மூட்டி பவுலையும் மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டார்கள்.

அந்தவேளையில் பவுல் சில விறகுகளை வாரிக்கொண்டுவந்து அந்த நெருப்பில் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் பவுலின் கையைக் கவ்விக்கொண்டது. அதைக் கண்ட அந்த தீவார் இந்த மனுஷன் கொலை பாதகன் இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்திற்கு தப்பிவந்தும் பழியானது இவனைப்பிழைக்கவிடவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லி கொண்டாங்க. இன்றைக்குங்கூட நம்முடைய வாழ்க்கையிலே ஏதாவது கஷ்டம் வந்துவிட்டால் போதும் அநேகர் நம்மை பார்த்து இவன் என்ன பாவம் செய்தானோ அதான் இவனை ஆட்டிப்படைக்குது அப்படியுனு சொல்லுவாங்க இல்லையா? அதைப்போல பவுலை நினைத்தாங்க, ஆனா பவுலோ அந்த விஷப்பூச்சியை தீயிலே உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவர்களோ அவன் வீக்கங்கண்டு அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று மிக கவனமாக பார்த்துக்கொண்டிருந்தார்கள். பவுலுக்கோ ஒரு சேதமும் ஏற்படாததைக் கண்டபோது, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள். பார்த்தீர்களா? அப்படியும் பேசுவாங்க ஒன்னும் நடக்கலைனா இவன் தேவனென்று இப்படியும் சொல்லுவாங்க!

இவைகளுக்குப் பின்பு அந்த தீவின் முதலாளியாகிய புபிலியு என்பவன் இவர்களை ஏற்றுக்கொண்டு மூன்று நாள் நன்கு பராமரித்தான். அவனுடைய தகப்பன் ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக்கிடக்கிறதை அறிந்த பவுல் அங்கு சென்று ஜெபம் பண்ணி அவனைக் குணமாக்கினான். இதை அறிந்த அந்தத் தீவில் உள்ள அநேக வியாதிக்காரர்களும் வந்து குணமாக்கப்பட்டார்கள். அந்த தீவார் பவுலுக்கும் உடன் வந்தவர்களுக்கும் செய்த மரியாதை கொஞ்சமல்ல நஞ்சமல்ல. அநேகம்! அந்நியர்களாகிய அவர்களின் அன்பு எப்படிப்பட்டது பார்த்தீர்களா? அந்நியர்களே இவ்வளவு அன்பு கூர்ந்திருக்கும்போது நாம் அதைக் காட்டிலும் அதிகமான அன்பு கூரவேண்டியது அவசியமல்லவா? நீங்களும் பிறனிடத்தில் அன்பு கூருவீர்களா? நீங்க அன்பு கூர்ந்தா உங்களிடத்தில தேவனும் அன்புகூருவாரு. தேவன் அன்பாகவே இருக்கிறார்.

***மனப்பாட வசனம்***

"உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்" (யாக்.2:8)

# வேத அறிவுப் போட்டி
# எண். 100

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. சுரூபங்கள் அபத்தமானதைச் சொல்லிற்று; குறிசொல்லுகிறவர்கள் எதைத் தரிசித்தார்கள்?
2. ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வாஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை என்ற அப்போஸ்தலன் யார்?
3. தானியம் வாலிபரையும், புது திராட்சரசம் எவர்களையும் வளர்க்கும்?
4. எவனை அகற்றும் என்று உக்கிரமாய்க் கூப்பிட்டபடியினாலே, போர்ச் சேவகர் அவனை தூக்கிக்கொண்டு போகவேண்டியதாயிருந்தது ?
5. வயல்களை இச்சித்து பறித்துக்கொண்டு, வீடுகளை இச்சித்து எடுத்துக்கொண்டு, புருஷனையும் அவன் வீட்டையும், மனுஷனையும் அவன் சுதந்தரத்தையும் ஒடுக்குகிறவர்களுக்கு என்ன?
6. நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் என்ன போடப்பட்டீர்கள்?
7. உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான்; என் பலிபீடத்தின்மேல் அக்கினியைக் கூலியில்லாமல் கொளுத்தவுமாட்டீர்கள் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார்?
8. மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்கு யாரல்ல?
9. நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார் என்ற தீர்க்கன் யார்?
10. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே என்று யார் எழுதுவது?

**"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன் நாள் முழுதும் அது என் தியானம்" சங்கீதம்119:97.**

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/164/2006-2008 Licensed to Post Without Pre-Payment License No.TN/WPP-25/SR 2006-2008 Posted at Batlagundu Post Office on 10th Dec.2008.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

**ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி**
**தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள**
**யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

**உங்கள் வானொலியில்**
**இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு**
**புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்**

**உங்கள் தொலைக்காட்சியில்**
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Tuesday 6.30 - 6.45 a.m
IMAYAM TV - Every Thursday 6.15 - 6.30 a.m

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**
**தேவைக்கு உடனே ரூ.15/-**
**அனுப்பி பெற்றுக்கொள்ளவும்**

**டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த**
**தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்**
**டிவிடிக்கள் தேவைப்படுவோா ரூ.100/-**
**அனுப்பி பெற்றுக்கொள்ளவும்**

**அனைத்து தொடர்புக்கும்** ➡

**Monthly Magazine**

**To**

*If undelivered please return to:*
**From**

**Editor**
**THE WORD OF CHRIST**
**P.O.Box-5**
**Batlagundu - 624 202**
**S.INDIA.**